ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 51

# ஸ்ரீமதுபயவே. வேங்கடாத்ரி அகரம். அனந்தார்ய மஹாதேசிகன்

ஸ்ரீமதுபயவே வேங்கடாத்ரி அகரம் வரதாசார்ய ஸ்வாமியின் மூத்த திருக்குமாரர் ஆன இந்த ஸ்வாமி, 1878 ஆம் வருஷம் சித்திரை மாதம் மிருகசீர்ஷ நக்ஷத்ரத்தில் பிறந்தார். இவர் பிறந்த சில தினங்களுக்குள் ஒரு ஸர்ப்பம் வீட்டிற்குள் வந்துவிட்டது. இவருடைய மாதாமஹன், "அனந்தா! இந்தக் குழந்தைக்கு உன்னுடைய பெயரை வைக்கிறேன். நீ போய்விடு" என்றவுடன் அது போய்விட்டது. ஆகவே இவருக்கு "அனந்தன்" என்று பெயர் இடப்பட்டது.

## கல்வியும் வேலையும்

தன் தகப்பனாரிடம் காவ்ய நாடகங்களைக் கற்று, உரிய காலத்தில் உபநயனம், ஸமாச்ரயணம் தகப்பனாரால் செய்விக்கப்பெற்றார். அவரிடமே வேதம் பயின்றார். தகப்பனார், தாய்வழிப் பாட்டனார், தம்பி இவர்களுடன் திருவையாறு சென்று ராஜா கலாசாலையில் வ்யாகரணம், ந்யாய சாஸ்த்ரம் இவைகளைக் கற்றார். தாய்வழிப் பாட்டனாரிடமும், புலவனூர் ஸ்ரீ தேசிகாசார்யரிடமும் வேதாந்த சாஸ்த்ரங்கள் பயின்றார். கருடபுரம் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடம் சில முக்கிய

சாஸ்த்ரங்கள் காலக்ஷேபம் செய்து அவரிடம் சரணாகதி செய்துகொண்டார்.

ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு ஆலவாய், குருவாயூர் ஆகிய இடங்களில் பள்ளி ஆசிரியராக இருந்து பிறகு சென்னைக்கு வந்து பச்சையப்பன் கல்லூரியில் ஸம்ஸ்க்ருத ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

## குடும்ப வாழ்க்கை

பொய்கைப்பாக்கம் க்ராமத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாஸாசார்யரின் குமாரத்தி கோமளவல்லியை மணம் செய்துகொண்டார். அவர்களுக்கு இரு பிள்ளைகள், மூன்று பெண்கள்.

இந்த ஸ்வாமி மிகவும் அமைதியானவர். சிறிதும் சீற்றம் கொள்ளாதவர். பெரிய குடும்பம், குறைந்த வருமானம். பல சங்கடங்களை மனம் தளராமல் நிர்வாஹம் செய்தவர். மனைவி உடல்நலம் சரியில்லாமல் வெகு நாட்கள் படுக்கையில் இருந்தபோது தன் பெண்கள் உதவியுடன் தானே அவளுக்கு உதவி செய்தார். 1928 முதல் தன் வாழ்நாட்களைக் கோடம்பாக்கத்தில் க்ருஷ்ணாபுரத்தில், "ஸித்தாச்ரமம்" எனும் சொந்த க்ருஹத்தில் கழித்துவந்தார்.

## சாதனைகள்

ஸ்ரீ V.V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீ D. ராமஸ்வாமி ஐயங்கார் இவர்களுடன் அனேக ஸதஸ்ஸுக்களில் கலந்துகொண்டும், தலைமை தாங்கியும், உபந்யாஸங்கள் செய்தும் பாராட்டுக்கள் பெற்றிருக்கிறார். ஒவ்வொரு வருடமும் தன் க்ருஹத்தில் திருப்பாவை உபந்யாஸம் செய்வார். ரஹஸ்யத்ரயஸாரம், சில்லறை ரஹஸ்யங்கள், போன்றவைகளைப் பிறருக்கு உபந்யாஸமாகச் சொல்லி விளக்கியிருக்கிறார். ஆசார்யபுருஷர், அனேக சிஷ்யர்களுக்கு ஸமாச்ரயணம், பரந்யாஸம் செய்திருக்கிறார். தன் குடும்பத்தினருக்கும் அவ்வாறே செய்திருக்கிறார்.

## இவர் வெளியிட்ட முக்ய க்ரந்தங்கள்

1. ஸ்ரீ ராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தை 10 அறிய வ்யாக்யானங்களுடன் தன் தம்பி ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருடன் இணைந்து வெளியிட்டார். முதல் அத்தியாயத்தில் மூன்று ஸூத்ரங்களே நிறைவுபெற்றன.

2. உடையவரின் நித்யத்துக்கு வங்கீபுரத்துக் காரிகையைப் பரிசோதித்து வெளியிட்டார்.

3. மந்த்ரஸால கட்டம் ச்ராத்த ப்ரயோகம்.

4. வேதாந்த தேசிகனின் ஸ்தோத்ரங்கள் (நாகர லிபியில்) - ஸ்ரீ ஸ்துதி, தசாவதார ஸ்தோத்ரங்கள் தமிழ் உரையுடன்.

5. ரகுவம்ச சரிதம் (இதன் சில பகுதிகள் இப்பொழுது பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக உள்ளன).

6. நாடக கதா ஸங்க்ரஹம்.

7. திருவாராதன க்ரமம்.

8. சந்த்ராபீட சரித்ரம்.

9. ஸந்த்யாவந்தன பாஷ்யம் (தமிழ் உரையுடன்).

10. ஸம்ஸ்க்ருத போதினீ.

11. ரஹஸ்யத்ரயஸாரம் (வடமொழியில்) - இன்னும் அச்சிடப்படவில்லை.

தாய்வழிப் பாட்டனார் ஆன பைத்தாம்பாடி வீரராகவாசார்யருக்குக் குமாரர்கள் இல்லாததால் அவருடைய சரம கைங்கர்யங்களைச் செய்து, வார்ஷிக ஆராதனமும், செய்துவந்தார். தன் சொந்த க்ருஹத்தில் வசித்துவந்த இவருக்கு வாதநோய் காரணமாக முடக்கம் ஏற்பட்டுப் படுத்திருந்து தன் 88 வயதில் பரமபதித்தார்.

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

ஸ்ரீசக்ரவர்த்தி குலநந்தன கல்ப சாகீ
ஸ்ரீமத் வரப்ரத குரூத்தம லப்த ஜன்மா ।
வேதாந்த யுக்ம விமலாசய தத்வ வேத்தா
ஸ்ரீமானனந்த குரு ராவஸதாத் மனோ மே ॥

ஸ்ரீமதே அனந்தார்ய மஹாதேசிகாய நம:

*************************

<u>ப்ரதி அருளியமைக்காக அநேககோடி க்ருதஜ்ஞதாரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்:</u> ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ஜகன்னாத தாதாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி.